

## "நாட்டியம் என் கனவல்ல, பிரார்த்தனை அல்ல; அது என் வாழ்க்கை!"

"நடனம் என்பது ஒரு கனவு மட்டுமல்ல, அதுவே என் வாழ்க்கை, இந்தக் கலை வடிவம்தான் என் வாழ்க்கை." என்று கூறும் திருமதி மிருதுலா ராய் ஒரு உறுதியான மற்றும் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர். இவர் உண்மையில், அனைவருக்கும் ஒரு உத்வேகம் ஆவார். இந்த நடன வடிவத்தை உயிருடன் வைத்திருக்க, கடுமையாக போராடும் இந்தப் பெண்மணி ஆரம்பத்தில் இருந்தே பரதநாட்டியத்தை பரப்ப அற்புதமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். மங்களூரில் உள்ள தல்லபாடி என்ற கிராமத்தில் பிறந்த இந்த நடனக் கலைஞரை ஊக்குவித்த ஒரே நபர் அவரது தாயார். அந்த நாட்களில், ஆண் ஆதிக்க சமுதாயத்தில், 6 குழந்தைகளில் ஒரே பெண் குழந்தையாக இருந்தும்,  மிருதுலாவில் இந்த திறமையை அடையாளம் கண்டுகொண்டதில், அவரது தாயைத் தவிர வேறு யாரும் முயற்சி எடுக்கவில்லை. இதற்கு மிருதுலா மிகவும் நன்றியுள்ளவராவார்.

மிருதுலா ராயின் உத்வேகம் அவரது முதல் குரு ஸ்ரீ. மோகன் குமார். இன்றைய நவீன உலகத்தில், வகுப்புகள் பெரிய அளவில் எடுக்கப்படுவதைப் போலல்லாமல், முன்பெல்லாம், மாணவர்கள் தாம் கற்பதற்கான வாய்ப்புக்காக காத்திருக்க வேண்டியிருந்தது. தன் குருவின் கண்காணிப்பில், அவர் படிப்படியாக நடனக்கலையில் மலர்ந்து, 'அரங்கேற்றம்' செய்து முடித்தார். நடனத்தில் மெருகேறிக்கொண்டிருந்த இந்த கலைஞருக்கு, 19 வயதாகியவுடன், திருமணம் ஆயிற்று. அதன் பிறகு அவர் கோயில்கள் நிறைந்த நகரமான மதுரைக்கு குடி புக வேண்டியிருந்தது. அங்கு, இவர் கர்நாடகாவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால், பல மொழி சார்ந்த பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தது. ஆரம்பத்தில், அவர் தனது வாழ்க்கைக்கு இன்றியமையாததாகக் கருதிய நடனக்கலை குறித்த நம்பிக்கையை விட்டுவிட்டார். இருப்பினும், எதிர்காலத்தில் சிறந்த நடனக்கலைஞர்களில் ஒருவராக ஆவதற்கான அவரின் விதி, அவரின் பாதையை உச்சத்தை அடையும் வரை வகுத்தது. தனது வீட்டிற்கு அருகில் வசித்துவந்த ஒரு சிறுமி பரதநாட்டியம் கற்க விரும்பினாள். அங்குதான் அவரின் நெடும் பயணம் தொடங்கியது. வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் காண ஆரம்பித்தது. பிறகு, மேலும் பல மாணவர்கள் அவரிடம் நடனம் பயின்றனர்.

அவர் 1992 இல் கோயம்புத்தூருக்கு குடி வந்தார். அங்கு ஓரிரு பள்ளிகளில் நடனம் கற்பிக்கத் தொடங்கினார். மெதுவாக அவர் கற்பித்த மாணவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 200 ஆக உயர்ந்தது. இருப்பினும், வாழ்க்கை வட்டத்தைப் போலவே, இவரது நடன வாழ்க்கையிலும் பல தடைகள் ஏற்பட்டன. திடீரென்று, அவரது கட்டுப்பாட்டு ஆற்றலுக்கு அப்பாற்பட்ட

காரணங்களினால் மாணவர்களின் எண்ணிக்கை 30 ஆகக் குறைந்தது.

தடைகளைக் கண்டு சற்றும் அஞ்சாத மிருதுலா ராய், அவற்றை ஒரு சவாலாக நினைத்து, துணிச்சலுடன் ஒரு முடிவெடுத்தார். அந்த முடிவு, இப்போது அனைவராலும் போற்றப்படுகின்றது. சிங்கநல்லூரில் தொடங்கிய , "ஸ்ரீ நாட்டிய நிகேதன்" என்று பெயரிடப்பட்ட ஒரு நாட்டிய பயிற்சி மையமே அந்த முடிவு ஆகும். பல மாணவர்கள் பயிலும் இந்த அற்புதமான இடத்தை உருவாக்கும் முயற்சியில், அவரது உறவினர்களும் நண்பர்களும், மிருதுலாவிற்கு உறுதுணையாக இருந்தனர் இந்த இடத்தை அவரது இரண்டாவது வீடு என்று அழைப்பது பொருத்தமாய் இருக்கும்.

இந்த பயிற்சி மையத்திற்கு, சரியான இடம் அமையாததால், பதினைந்து முறை மாற்ற வேண்டியதாயிற்று. எனினும், அவர் மனம் தளராமல், தொடர்ந்து நம்பிக்கையோடு தேடியதால், இறுதியாக இந்த சரியான இடம் அமைந்தது. "என் மாணவர்கள் மட்டும் இல்லாமல் போயிருந்தால், நான் இன்று இந்நிலையை அடைந்திருக்க முடியாது. அவர்கள் என் குடும்பம்" என்று மிருதுலா கூறுகிறார். மிருதுலாவைப் போல வேறு யாரும் தன்னலமற்றவர்களாக இருக்க முடியாது என்று அவரது மாணவர்கள் கூறுகின்றனர்.

மிருதுலா நடனம் மூலம் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகளுக்காக, பல விருதுகளை வென்றுள்ளார். கார்ப்பரேஷன் பள்ளிகளில் பயிலும், இத்தகைய சலுகைகள் கிடைக்கப்பெறாத மாணவர்களுக்கு, நடனம் கற்பிக்குமாறு அப்போதைய கார்ப்பரேஷன் ஆணையர் மிருதுலாவிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் அடிப்படையில், பல்வேறு கார்ப்பரேஷன் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு மிருதுலா கற்பிக்கிறார். இந்த குழந்தைகள் பல்வேறு மேடைகளில் ஆடியுள்ளனர். அவர்களில் சிலர், ஆறு நிலைத் தேர்வுகளையும் முடித்து, தங்கள் நடனத்தை 'அரங்கேற்றம்' செய்வார்கள் என்று மிருதுலா நம்பிக்கை கொண்டுள்ளார்.

கோயம்புத்தூரின் ரோட்டரி சங்கத்தின் அங்கீகாரத்தைத் தவிர, 'கலா நாட்டிய விசாரதே' , 'விகாச ரத்னம்' , மகப்பேறியல் கூட்டமைப்பு மற்றும் மகளிர் மருத்துவ சங்கத்தின் (FOGSI) 'வீ ஃபார் ஸ்திரீ' சூப்பர் ஹீரோ விருது, மற்றும் 'நாட்டிய மௌக்திகா' போன்ற விருதுகள், இவரின் விருதுப் பட்டியலில் சேர்ந்தன. வேகமாக வளர்ந்து வரும் இந்த நடன வகுப்பின் கலைஞர்கள், அந்த ரோட்டரி சங்கத்தின் மூலம் தான் டெல்லி, ஸ்பெயின் மற்றும் பல்வேறு இடங்களில் நிகழ்ச்சிகள் நடத்த முடிந்தது..

அவரது மாணவர்களில், ஏழு பேர் நடன பயிற்சி ஆசிரியர்களாக தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். இது அவர்களுடைய கடின உழைப்பாலும், இத்துறைக்கு தங்களை அர்ப்பணித்ததாலும் மட்டுமே சாத்தியமானது என்று மிகவும் பெருந்தன்மையோடும், தன்னடக்கத்தோடும் மிருதுலா கூறுகிறார். இந்த நடனமுறை வடிவத்தை மேம்படுத்துவதற்கு,



தனது மாணவர்கள் உறுதுணையாக இருப்பதில், இவர் மிகவும் பெருமை கொள்கிறார்.

இங்கு பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் கூட இவரால் ஈர்க்கப்பட்டு, எதையும் கற்றுக்கொள்ள வயது ஒரு தடையில்லை என்பதை உணர்ந்து, இந்த கலையை கற்றுக்கொள்வதில் தங்களை ஈடுபடுத்துகிறார்கள். இப்படி பல தரப்பட்ட வயதுக்காரர்கள் உள்ள பயிற்சி கூடம் என்பதால், இங்கு, ஆறு முதல் அறுபது வயதுடைய மாணவர்கள் பயிலுகின்றனர். இந்த பள்ளி, மேலும் பன்முகப் படுத்தப்பட்டு உள்ளதால், நடன பயிற்சி மட்டுமின்றி, யோகா, கலாரி ஆகிய துறைகளிலும் பயிற்சி அளிக்கிறது. பல்வேறு நடன கலைவிழாக்கள், கோவில் பண்டிகைகள், மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்கேற்பதோடு, இப்பள்ளி 'நிருத்ய சந்தியா' என்ற வருடாந்திர நிகழ்வையும் நடத்திவருகின்றது.

அவர், தம் மாணவர்களிடையே பணிவு, அடக்கம் ஆகிய குணங்களை மிக ஆழமாக பதியவைக்கிறார்.. பரதநாட்டியம் ஒருவரின் நடத்தையில் வரவேற்கத்தக்க மாற்றங்களைச் செய்தாலும், இந்த குணங்களும் மிகவும் அவசியம் என்று அவர் கூறினார்.

மொழி சார்ந்த மற்றும் சூழ்நிலை விளைவிக்கும் பிரச்சனைகள் போன்ற அனைத்து தடைகளையும் தாண்டி, இந்த அற்புதப் பெண்மணி 'ஸ்ரீ நாட்டிய நிகேதன்' பள்ளியைக் கட்டி வளர்ப்பதில் அசாதாரணமான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இது இப்போது 450 மாணவர்களைக் கொண்டும், இன்னும் வளர்ந்துகொண்டேயும் இருக்கிறது. யாரோ ஒரு முறை சொன்னது போல், "சிறந்த நடனக் கலைஞர்கள் அவர்களின் நுட்பத்தால் உயர்ந்தவர்கள் அல்ல, அவர்களின் பேரார்வத்தின் காரணத்தால் சிறந்தவர்கள்



ஆகிறார்கள்" என்பது, மிருதுலா அவர்கள் விஷயத்தில் தெளிவாகத் தெரிகிறது.

இத்தனை வருடங்களுக்குப் பின்பும், பல நிலைகளைக் கடந்தும், இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான இந்த நடனமுறை வடிவத்தை உயிர்ப்போடு வைத்திருக்கும் திருமதி மிருதுலா ராய் அவர்கள் 'கோவையின் சாம்பியன்' தான்.